**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் குறிப்பிட்டபோது, மானாமதுரையில் இருக்கிற அந்தத் தொழிற்பேட்டை மூடிவிடக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது சிப்காட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முத்தனேந்தலிலே சிட்கோ ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பித்து, அதில் பல கட்டடங்கள் கட்டி, இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைத் திறந்து வைப்பதற்கு, ஓட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**154—**

## தொழிற்பேட்டை

***42143—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழில் வளாகம் அமைக்க இருபது ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் அமைக்க முன்வருவார்களேயானால் தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 14]

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே இருக்கின்ற திருப்பத்தூர் தொகுதி மிக, மிகப் பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் பீடித் தொழில்கள், ஊதுவத்தித் தொழில்கள் செய்பவர்களாகவும், விவசாயக் கூலிகளாகவும்தான் இருக்கிறார்கள். இந்தத் தொகுதியில் ஒரு தொழிற்சாலைகூட கிடையாது. இங்கு படித்துவிட்டு, வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் 1980-வாக்கிலே தீவிரவாதச் செயல்களில் எல்லாம் ஈடுபட்டு—அன்றைய முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே, சோலையார்பேட்டையில் இருக்கிற மண்டலவாடிப் பகுதியிலே தொழிற்பேட்டை உருவாக்குவதற்காக அங்கே ஆய்வு செய்யப்பட்டு, அது கிடப்பில் இருக்கிறது—இப்போது அங்கு படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் அண்டை மாநிலமான கர்நாடகத்திற்கு, வெளி மாநிலங்களுக்கு பிழைப்பைத் தேடிச் செல்கின்ற அவல நிலை இருக்கிறது.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. டி.கே. இராஜா:** மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற அந்தப் பகுதி மக்கள், ஏழை மக்கள் படித்துவிட்டு வேலையில்லாது இருக்கின்ற காரணத்தாலே, அங்கே அவசியம் தொழிற்பேட்டை உருவாக்கி வேலைவாய்ப்பை உருவாக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் ஆரம்பிக்க முன்வருவார்களேயானால், கண்டிப்பாக அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு தொழிற்பேட்டை அமைவதற்கு முதலில் மாவட்டத் தொழில் மையம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாவட்ட சிறு தொழில் அமைப்புச் சங்கம் மற்றும் வர்த்தகச் சங்கங்களைச் சேர்ந்தவர்களையும், ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் விரும்புவார்களேயானால், நிச்சயமாக திருப்பத்தூரிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### மானியக் கோரிக்கைகள், 2005-2006, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005-2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for Grants for the financial year 2005-2006."

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்மீது கொடுத்திருக்கிறோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏற்கெனவே அதற்குப் பதில் அனுப்பப்பட்டு விட்டது.

**திரு. இ. புகழேந்தி:** அதுகுறித்து விவாதம் பண்ணுவதற்கு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவர்தம் இல்லை. பதில் அனுப்பப்பட்டு விட்டது. பதில் அனுப்பப்பட்டு விட்டது என்றால், அதற்குப் பிறகு ஒன்றும் இல்லை. அதற்குரிய, பேரவைத் தலைவருடைய பதில் உங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டது.